# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 28 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.11.28 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தம்)

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 101.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் 27 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன், விண்ணப்பக்காரரொருவர், அத்தகைய விண்ணப்பக்காரருக்கு பதிவுச் சான்றிதழொன்று வழங்கப்படும் வரை ஆணைக்குழுவிற்கு குறித்தசில கட்டணங்களை செலுத்தாமல் இருக்க ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 3:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயன், அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் ஊழியரொருவரின் ஊழிய வருமானம் தொடர்பில் வழங்கப்பட்ட வருமான வரிக்கான விலக்களிப்பை முடிவுறுத்துவதுமாகும்.

***வாசகம் 4:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இலங்கை ரூபாய்களை ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுவதற்காக ஏற்புடையற்பாலதான 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 5:*** இவ்வாசகம், தெளிவு நோக்கங்களுக்காக, குறித்தசில உரைப் பிழைகளை சரிசெய்வதற்காக முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துகின்றது.

***வாசகம் 6:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 42அ, 42ஆ, 42இ, 42ஈ, 42உ, மற்றும் 42ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது என்பதுடன் புதிய பிரிவுகளின் சட்டப்பயனானது, சர்வதேச தரநியமங்களுக்கமைவாக கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினை கொண்டு நடாத்துவதற்கு உரிமம்பெற்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆட்களின் ஒழுங்குபடுத்தலையும் மேற்பார்வையையும் நிறைவேற்றுவதற்கு மத்திய வங்கிக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 7:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது, மத்திய வங்கியின் பரிந்துரையின் மீது கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினை கொண்டுநடாத்துவதற்கு வழங்கப்பட்ட உரிமமொன்றை இடைநிறுத்துவதற்கு, இல்லாதொழிப்பதற்கு அல்லது இரத்துச்செய்வதற்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 8:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 9:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது, கரைகடந்த வங்கித்தொழிலை கொண்டுநடாத்துவதற்கு உரிமம்பெற்ற அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் நடாத்தப்படக்கூடிய வியாபாரங்களின் வகையை ஏற்பாடு செய்வதுமாகும்.

***வாசகம் 10:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றது என்பதுடன் புதிய பிரிவின் சட்டப்பயனானது, கரைகடந்த வங்கித்தொழிலை கொண்டுநடாத்துவதற்கு உரிமம்பெற்ற ஆளொருவரின் கணக்குகளை கணக்காய்வு செய்வது தொடர்பில் ஏற்பாடுகளைச் செய்வதுமாகும்.

***வாசகம் 11:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை நீக்குகின்றது.

***வாசகம் 12:*** இவ்வாசகம், கொழும்பு துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தொழிற்படுவதற்கு என்று வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளை முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்புடைமையிலிருந்து விலக்குவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துகின்றது.

***வாசகம் 13:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரங்களை அடையாளங்காண்பதற்கான கட்டளைக்கல்லை விதித்துரைப்பதற்கு ஏற்பாட்டைச் செய்வதுமாகும்.

***வாசகம் 14:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தில் 52அ, 52ஆ, 52இ, 52ஈ, மற்றும் 52உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துகின்றது என்பதுடன் புதிய பிரிவுகளின் சட்டப்பயனானது, செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரங்களின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்வதுமாகும்.

***வாசகம் 15:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் இது 13 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையுமாகும்.

***வாசகம் 16:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் இது 8 மற்றும் 13 ஆம் வாசகங்களினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையுமாகும்.

***வாசகம் 17:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதுமாகும்.

## கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தம்)

ச.வ.ஒ – 47/2025

### 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, சட்டத்தின் 27 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் " முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு, அதன் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப்பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

> “(2அ) இருபத்தெட்டாம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறாக விண்ணப்பக்காரரொருவருக்கு உரிமமொன்றும் பதிவுச்சான்றிதலும் வழங்கப்பட்டிருந்தாலொழிய, ஆணைக்குழுவானது, அத்தகைய விண்ணப்பக்காரரொருவரிடமிருந்து (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட கட்டணம் தவிர்ந்த காணிப் பயன்பாட்டுக் கட்டணமொன்று உள்ளடங்களாக ஏதேனும் கட்டணத்தை விதித்தலாகாது.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“அதிகாரமளிக்கப்பட்ட ஆள் வதிவுள்ளவரை அல்லது வதிவற்றவரை தொழிலுக்கமர்த்த அனுமதிக்கப்படுதல்

> **35.** (1) கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆணைக்குழுவினால்

PL 15547 - 470 (2025/11)

இப்பிரிவு தொடங்கும் தேதிக்கு முன்னர் எந்த ஆளுக்கு பதிவுசெய்தல், உரிமம், அதிகாரவளிப்பு அல்லது வேறு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தலோ அல்லது அளிக்கப்பட்டிருந்ததோ அவ்வாளொருவர், வதிவுள்ள அல்லது வதிவற்ற எவரேனும் ஆளை தொழிலுக்கமர்த்தலாமென்பதுடன் அத்தகைய ஊழியருக்கு, இலங்கை ரூபா தவிர்ந்த குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் ஊதியமளிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இப்பிரிவு எம்மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகிறதோ அம்மாதத்தை உடனடுத்துவரும் மாதத்திலிருந்து தொடங்கும் மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு –

(அ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட வதிவுள்ள ஊழியரொருவரின் ஏதேனும் ஊழிய வருமானம், வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வதிவுள்ள ஊழியரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கொன்றிற்கு அனுமதியளிக்கப்படற்பாலதான வரவொன்றாகக்கருதப்படுதலும் வேண்டும்;

(ஆ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவரினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட வதிவற்ற ஊழியரொருவரின் ஏதேனும் ஊழிய வருமானம், வருமான வரியிலிருந்து

விலக்களிக்கப்படுதல் வேண்டு மென்பதுடன், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய வதிவற்ற ஊழியர், இலங்கைக்கு வெளியே உழைத்த ஏதேனும் வருமானம் மீது இலங்கையில் வருமான வரிக்கு ஆளாதலுமாகாது.

(3) இப்பிரிவு எத்தேதியில் நடைமுறைக்கு வருகிறதோ அத்தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆணைக்குழுவினால் எவ்வாளுக்கு பதிவு, உரிமம், அனுமதி அல்லது வேறு அங்கீகாரம் வழங்கப்படுகிறதோ அல்லது அளிக்கப்படுகிறதோ அவ்வாளொருவரின் வதிவுள்ள ஊழியரொருவரினதும் வதிவற்ற ஊழியரொருவரினதும் ஏதேனும் ஊழிய வருமானம், வருமான வரிக்கு ஆளாதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 36 ஆம் பிரிவானது "விதித்துரைக்கப்பட வேண்டியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு அமையவும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விதித்துரைக்கப்படக்கூடியவாறான குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்திற்கு" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தாற் திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(1) வங்கித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகள், எது எவ்வாறிருப்பினும், இப்பாகத்தின் ஏற்பாடுகள்

கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் ஈடுபடவேண்டிய கரைகடந்த வங்கித்தொழில் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(2) வேறு நாட்டில் கூட்டிணைக்கப்பட்டதும் அல்லது தாபிக்கப்பட்டதும் அத்துடன் ஏதேனும் சட்டத்தின், பட்டயத்தின், நியதிச்சட்டத்தின், அமைப்பகவிதியின் அல்லது அந்நாட்டில் அத்தகைய கூட்டுத்தாபனத்தை அல்லது தாபித்தலை அத்துடன் அதிகாரவளிப்பை அமைத்துருவாக்கின்ற அல்லது வரைவிலக்கணம் செய்கின்ற வேறு ஏதேனும் சாதனத்தின் கீழ் வங்கித்தொழிலை கொண்டுநடாத்துவதற்கு உரிமமளிக்கப்பட்டதும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் ஈடுபடுவதற்கு உட்கருதுகின்றதுமான கம்பனியொன்று அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று, இச்சட்டத்தின் நியதிகளின்படி கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்புத்துறைமுகநகரஅதிகாரஇடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில் ஈடுபடுவதற்கான உரிமமொன்றுக்கென ஆணைக்குழுவுக்கு விண்ணப்ப மொன்றைச் செய்யலாம்." ; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் உரிமமொன்றை அளிக்க" என்னும் சொற்களுக்குப் பதிலாக" இச்சட்டத்தின்கீழ் உரிமமொன்றை அளிக்க" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 42அ, 42ஆ, 42இ, 42ஈ, 42உ மற்றும் 42ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**6.** முதன்மைச்சட்டவாக்கத்தின்42ஆம்பிரிவைஉடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுவதுடன் அவை 42அ, 42ஆ, 42இ, 42ஈ, 42உ மற்றும் 42ஊ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

“சர்வதேச வங்கித்தொழில் தர நியமங்களின் ஏற்புடைமை

**42அ.** (1) இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளின் ஒழுங்குபடுத்தலையும் மேற்பார்வையையும் மத்திய வங்கி கொண்டுநடாத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, காலத்துக்காலம் ஏற்புச் செய்யப்பட்ட சர்வதேச தரநியமங்களுக்கிணங்க, இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தை கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்எவரேனும் ஆளுக்கு, மத்திய வங்கி, அவசியமாக கருதக்கூடியவாறான ஏதேனும் கட்டளையை, பணிப்பை மற்றும் தீர்மானத்தை வழங்க அதிகாரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(3) இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ ஆவ்வாளொருவர் (2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டளை, பணிப்பு அல்லது தீர்மானத்துடன் இணங்கியொழுகுதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக சர்வதேசதர நியமங்கள், மூலதன போதுமை, திரவத்தன்மை, இடராபத்து முகாமைத்தும், மேற்பார்வை மீளாய்வு மற்றும் சந்தை ஒழுக்காறு என்பவற்றின் மீதான தேவைப்பாடுகளை உள்ளடக்கியிருத்தல் வேண்டும், ஆயின் அவற்றுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படுதலாகாது.

மூலதன போதுமைத் தேவைப்பாடுகள்

**42ஆ.** இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்தவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளுக்கு காலத்துக்காலம் ஏற்புச்செய்யப்பட்ட சர்வதேச தரநியமங்களுக்கிணங்க மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஆகக்குறைந்த மூலதன தேவைப்பாடு, மூலதனத்தின் போதுமான அளவு விகிதம் மற்றும் கடன் மூலதனப்பயன் விகிதத்தை பேணுதல் வேண்டும்.

இடராபத்து முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை மீளாய்வு

**42இ.** இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு உரிமமொன்று எவ்வாளுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளொருவர் காலத்துக்காலம் ஏற்புச்செய்யப்பட்ட சர்வதேசதரநியமங்களுக்கிணங்க, கடன்இடர், தொழிற்பாட்டு இடர், திரவ இடர் மற்றும் சந்தை இடர் என்பனவுட்பட, ஆயின் இவற்றுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாத இடர்களை அடையாளம் காண்பதற்கு, அளவிடுவதற்கு, கண்காணிப்பதற்கு மற்றும் தணிப்பதற்கு வலுவானதொரு இடராபத்து முகாமைத்துவ கட்டமைப்பை தாபித்து பேணுதல் வேண்டும்.

திரவத் தேவைப்பாடுகள்

**42ஈ.** இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளொருவர் காலத்துக்காலம் ஏற்புச்செய்யப்பட்ட சர்வதேசதரநியமங்களுக்கிணங்க, காலத்துக்காலம் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறானதிரவத் தேவைப்பாடுகளைப் பேணுதல் வேண்டும்.

வெளிப்படுத்துகை மற்றும் வெளிப்படைத்தன்மை

**42.உ.** (1) இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளொருவர், காலத்துக்காலம் ஏற்புச்செய்யப்பட்ட சர்வதேசதரநியமங் களுக்குகிணங்க, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புக்களுக்கமைவாக, அதன் நிதிசார் நிலை, மூலதனப் போதுமை மற்றும் திரவத்தன்மை என்பனவுட்பட ஆயின் அவற்றுக்குள் மட்டும் மட்டுப்படுத்தப்படாத காலாகால பகிரங்க வெளிப்படுத்துகைச் செய்தல் வேண்டும்.

(2) அத்தகைய வெளிப்படுத்துகை, பணிப்பு என்றவகையில் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான படிவத்திலும் முறையிலும் இருத்தல் வேண்டும்.

பணிப்புக்கள், வழிகாட்டுநெறிகள் மற்றும் கவனமுள்ள தரநியமங்கள்

**42ஊ.** இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாள்:-

(அ) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு களுடன் அல்லது அதன்கீழ் விதிக்கப் பட்ட ஏதேனும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுக தவறுகின்றவிடத்து;

(ஆ) ஏதேனும் மோசடியான, பாதுகாப் பற்ற அல்லது புத்திசாதுரியமற்ற வங்கித்தொழில் செயல்முறையில் ஈடுபடுகின்றவிடத்து; அல்லது

(இ) நிதிசார் உறுதிப்பாட்டை பேணிக் காப்பதற்கு தீங்குவிளைக்கும் என்று மத்திய வங்கி எந்த முறையில்

கருதுகின்றதோ அந்த முறையில் அதன் செயல்பாட்டை கொண்டு நடாத்துகின்றவிடத்து,

மத்திய வங்கி, அது அவசியமானதாக கருதக்கூடியவாறான அத்தகைய திருத்தமான வழிமுறைகளை எடுக்க அத்தகைய ஆளை தேவைப்படுத்தலாம் அல்லது மத்திய வங்கி தீர்மானிக்கக்கூடிய வாறான அத்தகைய தண்டனை களையும் மட்டுப்பாடுகளையும் விதிக்கலாம்:

ஆயின், இப்பாகத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள எதுவும், இப்பகுதியின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ஆணைக்குழுவுக்கான அறிவித்தலுடன் இடைநிறுத்துவதற்கு, இல்லாதொழிப்பதற்கு அல்லது இரத்து செய்வதற்கு நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சருக்கு விதப்புரைசெய்வதிலிருந்து மத்திய வங்கியை கட்டுப்படுத்துதலோ தடுத்தலோ ஆகாது.".

முதன்மை சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**7.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“உரிமமொன்றை இடைநிறுத்துதல் இல்லாதொழித்தல் அல்லது இரத்துச் செய்தல்

**43.** (1) இப்பாகத்தின் நியதிகளின்படி கொழும்பு துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலும் கொழும்பு துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழில்வியாபாரத்தினைகொண்டு நடாத்துவதற்கான உரிமமொன்று, மத்திய வங்கியினது விதப்புரையின்மீது நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரினால் இடைநிறுத்தப்படலாம், இல்லாதொழிக்கப்படலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம்:

ஆயின், இப்பிரிவின்கீழ் உரிமமொன்று இடைநிறுத்தப்படுவதற்கு, இல்லாதொழிக்கப்படுவதற்கு அல்லது இரத்துச் செய்யப்படுவதற்கு முன்னர், நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர், அவரது எதிர்வாதம் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை உரிமம்பெற்றவருக்கு அளித்தல் வேண்டும்.

(2) நிதி என்னும் விடயம் குறித்தளிக் கப்பட்ட அமைச்சர், உரிமமொன்றை இடைநிறுத்துதல், இல்லாதொழிதல் அல்லது இரத்துச் குறித்து முடிபொன்றைச் ஆக்குவதற்கு முன்னர், மத்திய வங்கி, ஆணைக்குழு அல்லது அத்தகைய வேறு ஆளிடமிருந்து அவரது அபிப்பிராயத்தில் எவ்வேறு கருமங்கள் மீது விசாரணை அவசியமென்று கருதுகிறாரோ அத்தகைய அவ்வேறு கருமங்கள் மீதான மேலதிக தகவலைக் கோரலாமென்பதுடன் அத்தகைய முடிபு உரிமம்பெற்றவருக்கும் மத்திய வங்கிக்கும், ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்படுதலும் வேண்டும்.".

**8.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 45 ஆம் பிரிவை நீக்குதல்

**9.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 46 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

"கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினை கொண்டு நடாத்துவதற்கு உரிமமொன்று வழங்கப்பட்ட ஆளொருவரினால் நடாத்தப் படவேண்டிய வியாபாரத்தின் தன்மை

**46.** (1) இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வேறேனுமாள், பின்வரும் எவையேனும் வியாபாரங்களை நடாத்தலாம்:-

(அ) எவரேனும் வதிவற்றவரிடமிருந்து ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்புக்கள், கால மற்றும் கேள்வி வைப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்;

(ஆ) எவரேனும் வதிவற்றவரிடமிருந்து குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயமொன்றில் ஏதேனும் தொகையை கடனாகப் பெறுதல்;

(இ) ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் எவரேனும் வதிவற்றவருக்கு கடனுதவியை விசாலித்தல்;

(ஈ) வேறேதேனும் கரைகடந்த கூறொன்றுடன் ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல்;

(உ) வதிவற்றவரொருவருடன் ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வேறேதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்;

(ஊ) இச்சட்டத்தின்கீழ் எதிர்பார்க் கப்படக்கூடியவாறாக ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வேறேதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்; அல்லது

(எ) மத்திய வங்கியின் ஒருப்பாட்டுடன் ஆணைக்குழுவினால் அதிகாரமளிக் கப்பட்ட, ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வேறேதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுதல்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு பங்கமின்றி, இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளொருவர், மத்திய வங்கியின் முன்னரான எழுத்திலான அங்கீகாரத்துக்கமைவாக சேமிப்புக்களை, கால மற்றும் கேள்வி வைப்புக்களை ஏற்கலாம் அல்லது ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது வதிவுள்ளவருக்கு கடனைக் கொடுக்கலாம்:

ஆயின், அத்தகைய அங்கீகாரம் அளிக்கப்படுதலில், மத்திய வங்கியானது பின்வருவனவற்றுக்கு தீங்குவிளைவிக்காத எதிர்பார்க்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் என்று தன்னளவில் திருப்திப்படுதல் வேண்டும்:-

(அ) உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை எய்துவதற்கும் பேணுவதற்கும் மற்றும் நிதிசார் முறைமை உறுதிப்பாட்டை பெறுவதற்கும் 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழான மத்திய வங்கியின் குறிக்கோள்களுக்கு; அத்துடன்

(ஆ) 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான உத்தியோகபூர்வ சர்வதேச ஒதுக்குகளின் கவன முள்ளதும் பயனுறுதியானதுமான முகாமைத்துவத்தை பயனுறுதி மிக்கமுறையில் கொண்டுநடாத்த ப்படுவதற்கு:

ஆயின், மேலும் இவ்வுட்பிரிவின் கீழான அங்கீகாரமானது, வதிவுள்ளவர்களின் அல்லது கொடுக்கல்வாங்கல்களின் விசேட வகுப்புக்கு அல்லது வகுப்புகளுக்கும் அத்துடன் மத்திய வங்கி அவசியமானதாக கருதக்கூடிய அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைவாக அளிக்கப்படலாம்.

(3) இப்பிரிவின் வேறு ஏற்பாடுகளுக்கு பங்கமின்றி, இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளொருவர், மத்திய வங்கி அவசியமானதாக கருதக்கூடிய அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கமைவாக, வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமம்பெற்ற வங்கிகளிலிருந்து ஏதேனும் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் கடன் பெறலாம்.

(4) இப்பிரிவில் அடங்கியுள்ளதெதுவும் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தின் செயற்பாடுகள் தொடர்பிலான செலவினத்தை அடைந்துகொள்ளும் நோக்கங்களுக்காக இலங்கையில் ஏதேனும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கியில் வட்டியில்லா ரூபாய் கணக்கொன்றை திறந்துபேணுவதிலிருந்து இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தினை கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளொருவரை தடுத்தலாகாது என்பதுடன், அத்தகைய கணக்குக்கான வரவு இலங்கைக்கு அனுப்பப்படும் வெளிநாட்டு நாணயத்தை மாற்றுவதனூடாக இருத்தலும் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவை மாற்றீடுசெய்தல்

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"கணக்குகளின் கணக்காய்வு

**48.** (1) மத்திய வங்கியானது –

(அ) இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கு எவ்வாளுக்கு உரிமமொன்று வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாளொருவரின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு தகைமைபெற்ற கணக்காய்வாளர்களின் நிரலொன்றை பணிப்பொன்று என்றவகையாக வழங்குதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய கணக்காய்வாளர்களிடையேயிருந்து கணக்காய்வாளரொருவரை நியமிப்பதற்கு அத்தகைய ஆளை செய்வித்தல் வேண்டும்;

(இ) மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் இடைவெளியிலும் மத்திய வங்கியின் மீளாய்வுக்காக கணக்காய்வாளரின் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு அத்தகைய ஆளை தேவைப்படுத்துதல் வேண்டும்; அத்துடன்

(உ) பந்தி (இ) இன்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கை போதியதற்றதாக, கணக்காய்வின் நோக்கெல்லையை மட்டுப்படுத்தப்பட்டதாக, மத்திய வங்கி அபிப்பிராயப்படின் அல்லது

மத்திய வங்கி பொருத்தமானதென கருதக்கூடியவாறான அத்தகைய வேறு காரணத்துக்காக, தேவைப் படக்கூடியதான அத்தகைய மேலதிக கணக்காய்வுகளை அதே கணக்காய்வாளரின்மூலம் அல்லது நிரலிலிருந்தான அத்தகைய வேறு கணக்ககாய்வாளர்மூலம் தேவைப்படுத்தல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இதனகத் துக்கீழ் நிறைவேற்றப்பட்ட ஏதேனும் கணக்காய்வுடன் தொடர்புபட்ட எல்லாச் செலவுகளும் அத்தகைய ஆளினால் பொறுக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழ் கரைகடந்த வங்கித்தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துவதற்கான உரிமமொன்று எவ்வாளுக்கு வழங்கப்பட்டுள்ளதோ அவ்வாள், மத்திய வங்கிக்கு அத்தகைய அறிக்கை சமர்ப்பிக்கப்படும் அதே நேரத்தில் ஆணைக்குழுக்கு (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப் பட்டவாறான அத்தகைய கணக்காய்வு அறிக்கையின் பிரதியொன்றை சேர்ப்பிக்கப்படுவதற்கு செய்வித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவை திருத்துதல்

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 49 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 51அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 51 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் அது அச்சட்டவாக்கத்தின் 51அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

“இப்பாகம் வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடையதாகாது

**51அ.** இப்பாகத்தில் அடங்கியுள்ள தெதுவும், வங்கித்தொழில் சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் கொழும்புத் துறைமுக நகர அதிகார

இடப்பரப்பிலும் கொழும்புத் துறைமுக நகர அதிகார இடப்பரப்பிலிருந்தும் அதனது தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துகின்ற வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு ஏற்புடைய தாகாது.".

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "வியாபாரங்களை அடையாளங்காணலாம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விதித்துரைக் கப்படக்கூடியவாறான கட்டளைகளுக்கிணங்க வியாபாரங்களை அடையாளங்காணலாம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,";

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(3அ) மூன்றாம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வரி தொடர்பான விலக்களிப்புகள், ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட இயைபான தொழிநுட்ப உள்ளீடுகளுடன் நிதி அமைச்சினாலான தொழிநுட்ப பகுப்பாய்வொன்றுக்கு அமைவாகவிருத்தல் வேண்டும். நிர்ணயக்கப்பட்ட இலக்குக்கு எதிரான செயல்நுணக்க முக்கியத்துவம்வாய்ந்த வியாபாரங்களின் தொடர்ச்சியான செயலாற்றுகையை கண்காணிப்பது ஆணைக்குழுவின் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.";

(3) அதன் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் புதிய உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(5) ஆகக்குறைந்த முதலீடுகளையும் வகுதிகளையும், ஆகக்குறைந்த வேலை உருவாக்கங்களை மற்றும் விலக்களிப்புகளையும்

ஊக்குவிப்புகளையும் விதித்துரைக்கின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(5அ) நிதி அமைச்சானது இச்சட்டத்தின் கீழான செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு ஏற்புடையற்பாலனவான விலக்களிப்புகளையும் ஊக்குவிப்புகளையும் ஆணைக்குழுவுடான கலந்தாலோசனையுடன் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் மீளாய்வு செய்யலாம்."; அத்துடன்

(4) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்கு பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:-

"(7) இப்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புகளின் செல்லுபடிக்காலப்பகுதி விதித்துரைக்கப்பட்ட வாறாகவிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 52அ, 52ஆ, 52இ, 52ஈ மற்றும் 52உ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 52 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 52அ, 52ஆ, 52இ, 52ஈ மற்றும் 52உ எனும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"செயல் நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் நிகழ்வுக்குப் பின்னரான கண்காணிப்பு

**52அ.** (1) ஆணைக்குழுவானது காலத்துக் காலம் ஏதேனும் கருத்திட்டம் தொடர்பில் அது தோதானதாகக் கருதக்கூடியவாறாக, முக்கிய செயல் நிறைவேற்றச் சுட்டிகளின் நிகழ்வுக்குப் பின்னரான கண்காணிப்பை மதிப்பீடுசெய்தல் வேண்டுமென்பதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் விளைவுகள் மற்றும் அரசிறை வரும்படித் தாக்கங்களை அதன் அலுவலக முறையான இணையத்தளத்தில் வெளியிடுவதன் மூலம் மக்களுக்கு வெளிப்படுத்துதலும் வேண்டும்.

(2) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அங்கீகரிக்கப்பட்ட முக்கிய செயல் நிறைவேற்றச் சுட்டிகளுடன் இணங்கியொழுக தவறுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது பின்வருவனவற்றை உள்ளடக்கிய இணங்கியொழுகாமை அறிவித்தலொன்றை அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு வழங்குதல் வேண்டும் –

(அ) இணங்கியொழுகாமையின் தன்மை;

(ஆ) திருத்த நடவடிக்கைக்கான குறித்துரைக்கப்பட்ட காலவெல்லையொன்று;

(இ) உடனடி இணங்கியொழுகுதலை தேவைப்படுத்துகின்ற பணிப்பொன்றை மற்றும் இணங்கியொழுகுதலை உறுதிப்படுத்துவதற்கு அவசியமானவாறான வேறு ஏதேனும் பரிகார அல்லது வலுவுறுத்தல் நடவடிக்கைகளை எடுக்கின்ற விதப்புரைகளை; அத்துடன்

(உ) தோதாகவிருக்கின்றவிடத்து, இணங்கியொழுகுதல் திட்டமொன்றை சமர்ப்பிப்பதற்கான தேவைப்பாடொன்று.

(3) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட ஆள், ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்படும் காலத்தினுள் திருத்த நடவடிக்கையை எடுக்க தவறுகின்றவிடத்து, ஆணைக்குழுவானது இணங்கியொழுகாமையின் தன்மை

மற்றும் பாரதூரத்தை கவனத்திட்கொண்டு பின்வரும் நடவடிக்கைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நடவடிக் கைகளை எடுக்கலாம்:-

(அ) செயல்நுணுக்க முக்கியத் துவம்வாய்ந்த வியாபாரங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் அல்லது எல்லா விலக்களிப்பு களை அல்லது ஊக்குவிப்புகளை மட்டுப்படுத்தலாம், இடை நிறுத்தலாம் அல்லது இல்லா தொழிக்கலாம்; அல்லது

(ஆ) அது தொடர்பில் உறப்பட்ட இழப்பை அறவிடுவதற்கு நிருவாக தண்டங்களை விதிக்கலாம்.

காரணங் காட்டுவதற்கான அறிவித்தல்

**52ஆ.** (1) ஆணைக்குழு, 52அ பிரிவின் (3) உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கையை எடுக்க முன்னர் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்கு நடவடிக்கைக்கான ஏதுக் களை குறித்துரைத்து எழுத்தில் அறிவித்த லொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான அறிவித்தலொன்று, அறிவித்தல் பெறப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதகாலப்பகுதியினுள் 52அ பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) அல்லது (ஆ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கை ஏன் எடுக்கப்படுதலாகாது என்பதை காரணங்காட்டுவதற்கு, செயல்நுணுக்கு முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆளை தேவைப்படுத்துதல் வேண்டும்.

(3) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆள், இறுதித் தீர்ப்பொன்று ஆக்கப்பட்ட முன்னர் ஒன்றில் நேரடியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவரூடாக விசாரிக்கப்படுவதற்கு நியாயமான சந்தர்ப்பமொன்று வழங்கப்படுதல் வேண்டும்.

(4) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களின் அதிகாரமளிக்கப்பட்ட ஆள் அல்லது அவரது பிரதிநிதியால் செய்யப்பட்ட ஏதேனும் பிரதிநிதித்துவத்தின் கவனக்கரிசனை மீது, ஆணைக்குழுவானது, எழுத்தில் பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்கள் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட எவையேனும் அல்லது எல்லா விலக்களிப்புகளையும் அல்லது ஊக்குவிப்புகளையும் மட்டுப்படுத்தலாம், இடைநிறுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

**வரி விபரத்திரட்டுக்களை கோப்பிடுதல்**

**52இ.** அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளில் வரி விபரத்திரட்டுக்களை கோப்பிடுதல் வேண்டும்.

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கான வரிச் செலவினங்களின் வருடாந்த அறிக்கை**

**52ஈ.** நிதி அமைச்சு, ஒவ்வோர் நிதியாண்டு தொடர்பிலும், இச்சட்டத்தின் கீழான செயல்நுணுக்க முக்கியத்துவம்வாய்ந்த எல்லா வியாபாரங்களுடனும் தொடர்புடைய வரிச்செலவினங்கள் மீதான வருடாந்த அறிக்கையொன்றை அதன் அலுவலகமுறையான இணையத்தளத்தில் வெளியிடுதல் வேண்டும்.

மீளாய்வு

**52உ.** நிதி அமைச்சு, ஆணைக் குழுவுடனான கலந்தாலோசனையில், ஐந்து ஆண்டுகளின் காலாவதியின் மீது, வரி விடுமுறை காலப்பகுதி மற்றும் இச்சட்டத்தின் கீழான செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு ஏற்புடையற்பாலனவான விலக்களிப்புக் களையும் ஊக்குவிப்புகளையும் மீளாய்வு செய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவைத் திருத்துதல்

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 53 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பற்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) முன்மொழியப்பட்ட தொடக்கத் தேதியும் விதித்துரைக்கப்பட்ட வாறாக எத்தேதியில் அத்தகைய விலக்களிப்புகள் அல்லது ஊக்குவிப்புக்கள் இல்லாதொழிய வேண்டுமோ அத்தேதியன்றும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்

**16.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (ச) என்னும் பந்தியை நீக்கிவிடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் –

"(ஞ) ஆகக்குறைந்த முதலீடு மற்றும் வகுதி, ஆகக்குறைந்த வேலை உருவாக்கம் மற்றும் விலக்களிப்புகளையும், ஊக்குவிப்புக் களையும் விதித்துரைத்தல்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்

**17.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவானது பின்வருமாறு இத்தால் திருத்தப்படுகின்றது:-

(1) "வியாபாரம்" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "மத்திய வங்கி" என்பது, 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கி எனப் பொருள்படும்;"; அத்துடன்

(2) "அரசாங்க சந்தைப்படுத்தப்படற்பாலதான காணி" என்னும் சொல்லமைப்பிற்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

" "சர்வதேச நியமங்கள்" என்பது, வங்கித்தொழில் மேற்பார்வை மீதான பசெல் குழு மற்றும் நிதிசார் நிலைவுறுதிச் சபை, உட்பட பூகோல ரீதியில் ஏற்றங்கீகரிக் கப்பட்ட நிறுவனமொன்றினால் வெளியிடப்பட்டவையும் பல நாடு களிலிருந்தான நிபுணர்களின் கருத் தொற்றுமையினூடாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளவையும் கோட்பாடுகள், வழிகாட்டுநெறிகள் செயன்முறைகள், அல்லது பண்பியல்புகளைக் கொண்டு ள்ளவையுமான நியமங்கள் எனப் பொருள்படும்;".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.